OS .No. 51 /2002

Dated : 16.12.2021

Time: 12.13 p.m To 12.50 p.m.

P.W. - 1 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1,3 பிரதிவாதிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்குவிசராணை செய்யப்பட்டார்.

<u>குறுக்குவிசாரணை</u>

எனக்கு வயது தற்போது 47. நான் அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். எனது மாமனார் கணபதி கவுண்டர் 1952 ல் ஆத்தூர் தாலுக்கா ஊனத்தூர் கிராமத்திற்கு வந்தார் என்றால் சரிதான். ஊனத்தூர் கிராமத்தில் முதலில் கணபதி கவுண்டர் அந்த ஊர் தலைவரிடம் பண்ணையாராக பணிபுரிந்தார் என்றால் சரியல்ல. ஆனால் அவர் நிலத்தில் ஒரு பகுதியை குத்தகைக்கு ஓட்டி வந்தார் என்றால் சரிதான். வேப்பநத்தம் கிராமத்தில் என் மாமனாருக்கு முதன் முதலில் கிடைத்த நிலம் புல எண்.34/2 ல் உள்ள 4 ஏக்கர் 11 செண்ட் என்றால் சரிதான். அந்த நிலம் அவருக்கு "டி" கார்டு மூலம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது கணபதி கவுண்டருக்கு அரசாங்கத்தால் "டி" கார்டில் கொடுக்கப்பட்டதற்கான "டி" கார்டின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடுசெய்யப்பட்டது. மேற்படி சொத்து வழக்கு சொத்தில் 2 வது அயிட்டத்தில் ஒரு பகுதி என்றால் சரிதான். அதன் பிறகு 15.09.1984 ல் ஊனத்தூர் கிராமத்தில் உள்ள புல எண்.158/2 ன் கீழ் உள்ள மொத்த 3 ஏக்கர் 58 செண்ட் நிலத்தில் குறிப்பிட்ட 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தை எனது மாமனார் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்படி கிரயப்பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்பட்டது. அதே தேதியில் எனது மாமியார் கணகம் என்பவர் ஊனத்தூர் புல எண்.158/2 ல் இருந்த மீதி 0.92 ஏக்கர் நிலத்தையும், புல எண்.158/3 ல் உள்ள 1 ஏக்கர் 44 செண்ட் நிலத்தையும் கிரயத்திற்கு வாங்கினார் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்பட்டது. அனைத்து சொத்துக்களும் கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது. வேப்பநத்தம் கிராமம் புல எண்.34/1 ல் இருந்த மொத்த 4 ஏக்கர் 15 செண்ட் நிலமும், அதில் உள்ள கிணறும் ஆகிய இவைகளில் 2 ஏக்கர் 7 1/2 செண்ட் நிலமும், கிணற்றில் ஒரு பகுதியையும் என் மாமியார் கனகம் கிரயத்திற்கு வாங்கினார் என்றால் கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரயம் வாங்கினார். என்னிடம் காட்டப்படுவது அந்த பத்திரம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்பட்டது. மேற்படி சொத்து கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமியாரின் அப்பா, அம்மா, அண்ணன் ஆகியோர் ஊனத்தூரில் இருந்தார்கள். என் மாமியாரின் பெற்றோருக்கு ஊனத்தூரில் 12 ஏக்கர் நிலம் இருந்தது என்றால் சரியல்ல, அவர்கள் கூலி வேலை செய்து வந்தார்கள். என் மாமியாரின் பெற்றோர் வீட்டில் கூலி வேலை செய்யவில்லை என்றும், அவர்கள் நல்ல வசதியுடன்தான் இருந்தார்கள் என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ல் கண்ட சொத்தை 3 ம் பிரதிவாதியின் பெற்றோர் வீட்டில் அவருக்கு உண்டான பாகத்திற்கு ஈடாக கிரயம் வாங்கி கொடுத்தார்கள் என்றால்

சரியல்ல. அவ்வாறு கிரயம் வாங்கிகொடுத்ததால்தான் 3ம் பிரதிவாதியின் பெற்றோர் வீட்டில், பெற்றோர் வீட்டு சொத்துக்கள் சம்மந்தமாக விடுதலை எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமியாரின் அப்பா பெயர் இளையப்ப கவுண்டரா என்று தெரியாது. என் மாமியாரின் அண்ணன் பெயர் ராமசாமியா என்று தெரியாது. எனது மாமியாருக்கு இரண்டு அண்ணன்கள். மற்றொரு அண்ணன் குமாரசாமியா என்று தெரியாது. குமாரசாமி 1985 க்கு முன்பு இறந்துவிட்டாரா என்று தெரியாது. குமாரசாமியின் மனைவி பெயர் அமுதாவா என்று தெரியாது. என்னிடம் காட்டப்படுவது 3ம் பிரதிவாதி அவருடைய பெற்றோர் குடும்ப சொத்துக்களை பொறுத்து எழுதிகொடுத்த விடுதலை பத்திரமா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 19.11.1985 தேதியிட்ட விடுதலை பத்திரம் ஜோடனையானது. விடுதலை பத்திரத்தை ஒப்புக்கொண்டால் என் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் உண்மைக்கு மாறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது)

Sd/-Selvi.R.Dhanam,
Subordinate Judge,
Attur.